# மெட்ரோ ரயில் நிலையங்களில் கண், பல் பராமரிப்பு முகாம்

சென்னை, டிச.15: சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் மற்றும் வாசன் கண் மற்றும் பல் பராமரிப்பு நிறுவனம் ஆகியவை சார்பில், சென்னையில் 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் பல் மற்றும் கண் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் வரும் 17-ஆம்தேதி முதல் 21-ஆம்தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த முகாம் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறுகிறது.

அண்ணாநகர் கிழக்குமெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 17-ஆம் தேதியும், அண்ணாநகர் கோபுரம் மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 18-ஆம் தேதியும், சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 19-ஆம் தேதியும், கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 20-ஆம் தேதியும், விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்தில் வரும் 21-ஆம் தேதியும் முகாம் நடைபெறும்.

ரயில் பயணிகள் , பொதுமக்கள் இதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.